1972 ஏப்ரல் 6]

ஒன்று. இரண்டாவது பல ஆண்டுகளாக விற்பனை வரி கட்டாமல் ஏய்த்துக் கொண்டிருந்தவர்களைக் கண்டு பிடித்து வரி வசூல் செய்வதனாலும் பெருகி இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : வணிக வரி இலாக்காவினர் 56-57-இல் செயல்பட்டதை விட வேகமாக எல்லாத் துறைகளிலும் கடுமையாக வரி வசூல் செய்கிற காரணத்தினால்தான் வரி பெருகியிருக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கண்டிப்பாக என்பது கூடச் சரியில்லை. வசூலாகாமல் இருக்கிற பாக்கிகள் அதிகமாக இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் அவற்றையும் சேகரித்துக் கொடுப்பேன். வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடித்து வசூலிப்பதனால் பெருகியிருக்கிறது. மற்றொன்று எல்லாத் துறைகளிலும் வியாபாரம் பெருகி வந்திருக்கிறது என்பதுதான் தாத்பர்யம்.

திரு. கே. எ. வகாப் : இப்படி 96 கோடி ரூபாய் பலமுனை வரி விதிப்பின் மூலம் வசூலாகி யிருக்கிறது என்று நினைக்கிறேன். பலமுனை வரியினால் பல விதமான தொல்லைகள் மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால்—வர்த்தகச் சமூகத்தினர் 100 கோடிக்குத் தரத் தயாராக இருந்தால் ஒரு முனை வரியாக விதிக்க அரசு முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதன் மூலம் 106 கோடி ரூபாய் வரும் என்று எற்கனவே கணக்கு எடுத்திருக்கிறோம். இந்த 96 கோடி ரூபாய் விற்பனை வரி மூலம் மட்டும் வந்ததாக எண்ணக் கூடாது. தமிழ்நாடு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் 6,390 லட்சம். சென்டிரல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் 1,606 லட்சம். தமிழ்நாடு மோட்டார் ஸ்பிரிட் டாக்சேஷன் ஆக்ட் மூலம் 796 லட்சம். தமிழ்நாடு எண்டர்டெயின்மென்ட் ஆக்ட் மூலம் 442 லட்சம். தமிழ்நாடு லோக்கல் அத்தாரிட்டி பினான்ஸ் ஆக்ட் மூலம் 416 கோடி. தமிழ்நாடு பெட்டிங் டாக்ஸ் ஆக்ட் மூலம் 149 லட்சம். இவை எல்லாவற்றையும் சேர்த்துத்தான் 96 கோடி சொச்சம் ஆகும்.

அரிசன மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள்.

***900 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அரிசன நலப் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம், சிலேட்டு கொடுக்க அரசு 1967-68-ம் ஆண்டிலும், 1971-72-ம் ஆண்டிலும் முறையே செலவழித்த தொகை எவ்வளவு?

[1972 எப்ரல் 6

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: குறிப்பிட்ட ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகைகள் பின்வருமாறு :—

1967–68	..	ரூ. *34,193.00*
1971–72	..	ரூ. *41,660.00*

திரு. கோ. இளங்கோவன்: அரிசனப் பிள்ளைகள் என்கிறபோது உயர்நிலைப் பள்ளிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் அரிசனப் பிள்ளைகளுக்கு சிலேட், புத்தகம் கொடுப்பதற்கு இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சிலேட், புத்தகங்கள் கொடுப்பதற்காக ஜில்லாவாரியாக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அந்த விவரம் என்னிடம் இல்லை தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆண்டுவாரியாகப் பார்த்தால் 67-68-இல் ரூ. 34,193. 68-69-இல் ரூ. 34,629. 69-70-இல் ரூ. 52,684. 70-71-ல் ரூ. 40,541, 71-72-ல் ரூ. 41,660 ஆகும்.

திரு. எஸ். முருகையன்: தலைவர் அவர்களே, அரிசன நலப் பள்ளிகளில் நமது மாநிலத்தில் மொத்த மாணவர்கள் எத்தனை பேர் படிக்கிறார்கள்? எத்தனை பேர்களுக்கு இலவசமாகப் புத்தகம், சிலேட்டு வழங்கப்பட்டிருக்கிறது? அவைகள் எல்லாம் உரிய காலத்தில் வழங்கப்படுகிறதா? மாணவர்களுடைய எண்ணிக்கையைவிட ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறதே? அதனால் எல்லா மாணவர்களுக்கும் கொடுக்க முடியுமா? ஆகவே, எல்லா அரிசன மாணவர்களுக்கும் கொடுக்க அரசு தக்க வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது, எத்தனை மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது என்கிற தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. அவைகள் எல்லாம் உரிய காலத்தில்தான் கொடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு தொகை செலவிடப்படுகிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, தனிச் கேள்வி போடவும்.

திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, இப்பொழுது வழங்கப்படுகிற சிலேட்டுகள் தரம் குறைந்திருக்கின்றன. ஒரு தடவை எழுதிவிட்டு, அதை அழித்து மறுபடியும் எழுத முடியாத நிலைமையில் சிலேட்டுகள் இருக்கின்றன.

1972 ஏப்ரல் 6]

அரசாங்கம் இதை சாதாரண விஷயமாக நினைக்கக் கூடாது. நாம் எவ்வளவோ செலவு செய்து மாணவர்களுக்கு சிலேட்டுகள் வழங்குகிறோம். அப்படி வழங்குகிற சிலேட்டுகள் நல்ல தரமுள்ளவையாக வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : க்வாலிட்டி கன்ட்ரோலா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைத் தவிர வேறு எந்தவிதமான புகாரும் இதைப்பற்றி வரவில்லை. குறைபாடு இருந்தால் அரசு ஆராய்ந்து நல்ல தரமுள்ளவையாக இருப்பதை வழங்கும்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, அரிசன மாணவர்கள் எம்.பி.எஸ்.சி. போன்ற பரிட்சைகளை எழுதுவதற்காக பயிற்சி அளிப்பதற்காக நன்னிலம் போன்ற பகுதிகளில் ஒரு சென்டரை திறந்தார்கள். அதில் இருக்கும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய்தான் தருகிறார்கள். அந்த 20 ரூபாயை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மகஜர் அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி அந்த அளவை உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பான கேள்வி அல்ல. இருந்தாலும், 20 ரூபாய் என்று தருவது அங்கே தங்கிப் படிக்க அல்ல. தாலுகாவின் பல பகுதிகளிலிருந்து வந்து படிக்கின்ற மாணவர்களின் பஸ் செலவுகளுக்காகத்தான் இந்தத் தொகை அளிக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்படுகின்ற சிலேட்டுகள் சரியாக இல்லையென்கிற குறை சொல்லப்படுகிறது. அண்மைக் காலத்தில் மாஜிக் சிலேட்டுகள் வந்திருக்கிறது. ஒரு தடவை எழுதிவிட்டு, அதிலுள்ள பேப்பரை எடுத்துவிட்டால், நாம் எழுதியது அழிந்துவிடுகிறது. ஆகவே, அதனுடைய விலை சற்றுக் கூடுதலாக இருந்தாலும், அவைகளை வாங்கி மாணவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சிலேட் இருப்பதைப் போன்று எழுதிய எழுத்தும் அந்தமாதிரி அழிந்து போய்விட்டால் என்ன செய்வது (சிரிப்பு) நாம் மாஜிக்கை நம்பக் கூடாது.